பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 18 புதன்கிழமை 02.07.2025 அதிர்வு 332

## புதிய பகுதிகளிலும் அகழ்வு நடவடிக்கை

### துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)



மனிதப் புதைகுழி அடையாளம் காணப் பட்ட யாழ். செம்மணி 04





# செம்மணிப் புதைகுழியில் பொம்மை ஒன்றும் மீட்பு!

## மேலும் சில மனித எலும்புக்கூடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த நிலையில் நேற்று அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மை ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 'யுனிசெவ்' சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பாடசாலைப் புத்தகப் பையோடு அடையாளம் காணப்பட்ட சிறிய பிள்ளையினுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மனித என்புத் தொகுதிக்குக் கீழேயே இந்தப் பொம்மை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

03








நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - 34 சபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றி தமிழரசுக் கட்சி சாதனை புரிந்திருப்பதாக பிரலாபித்துக் கொள்கிறது.

ஆனால் தமிழர் மாவட்டமான மன்னாரில் நான்கு உள்ளூராட்சி சபைகளையும் தமிழரசு அடியோடு கோட்டை விட்டு விட்டது.

இதற்கு தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட தலைமையே பொறுப்பு என்பதை என் பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறேன்.

இந்தத் தேர்தல் சமயத்திலும், தேர்தல் முடிந்த பின்னரும் கட்சியின் மாவட்டத் தலைமையின் அணுகுமுறை தொடர்பாக மன்னார் மாவட்டத் 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளியேன்!

## ஜனாதிபதி அநுரகுமார திட்டவட்டம்



வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாக அறிவித்தார்.

இலங்கை ராமான்ய மகா பீடத்தின் 74 ஆவது உபசம்பதா மஹோத்சவத் தின் தொடக்க விழாவில் உரையாற்றுகை யிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத் தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதாக சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதன் ஊடாக அரசியல்வாதிகளன்றி வடக்கிலும் தெற்கிலும் உள்ள அப்பாவி பெற்றோர் களின் பிள்ளைகளே பலியானதாகவும் தெரிவித்தார்.

இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பப் பாடுபட வேண்டும் என்றும், அனைவருக்கும் ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செயற்படும் திறன் இருந்தாலும், இன வாதம் மீண்டும் ஒருபோதும் தலை தூக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் பலப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும் என்றும், சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே தனது அரசின் நோக்கம் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குள் பெரும் புகைச்சல் கிளம்பி இருப்பதாகத் தெரிகிறது. மாவட்ட நிர் வாகத்தை அடியோடு மாற்றி அமைத் தால் மட்டுமே அங்கு மீண்டும் கட்சி காலூன்ற முடியும் என்ற நிலைமைதான் இப்போது உள்ளது.

ஏற்கனவே கட்சியின் முன்னைய தலைமை எடுத்த தவறான நடவடிக்கை யால் கட்சியை அங்கு வளர்க்கக்கூடிய இளம் தலைமுறையை ஏற்கனவே கட்சி இழந்துள்ளது. இப்போது அங்கு கட்சியை மறுசீரமைக்கும் போது, அந்தத் தரப்புகளை எல்லாம் மீண்டும் அரவணைத்து, உள்வாங்கி, அவற்றின் மூலம் கட்சியைப் புனரமைப்பதுதான் புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்கும். இப்போது தலைமையேற்று உள்ளவர்கள், பழைய தவறைத் திருத்த முயல்வார்களா? பார்த்திருப்போம்.

* * *

ராமேஸ்வரத்தில் இருந்து திங்கள் இரவு கடற்றொழிலுக்குப் புறப்பட்ட ஏழு தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காக இலங் கைக் கடற்படையினரால் கைது செய் யப்பட்டு, நேற்று மன்னார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இப்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உண்மையில் அவர்களது படகில் மொத்தம் எட்டு மீனவர்கள் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

எட்டாவது நபர் படகின் ஓட்டி என் றும், ஏற்கனவே ஒரு தடவை எல்லை மீறி மீன்பிடித்தமைக்காக இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் இருந்து, ஒத்திவைக் கப்பட்ட சிறைத்தண்டனையின் அடிப் படையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

மீண்டும் எல்லை மீறியமைக்காகத் தாம் பிடிபட்டால் தம் கதி அதோகதி என்று கருதிய அந்த ஓட்டி, இலங்கைக் கடற்படைப் படகுகள் தமது படகை நெருங்கியதை அவதானித்ததும், கட லில் பாய்ந்து ராமேஸ்வரம் பக்கம் நோக்கி நீந்தத் தொடங்கி விட்டார் என்று கூறப்படுகிறது.

இப்போது அவர் ராமேஸ்வரத்தை பாதுகாப்பாக சென்றடைந்து விட்டார் என்றும் அறிய வந்தது.

புத்திசாலி ஓட்டிதான். ஆனால் அவரின் பொறுப்பில் தமது படகை கொடுத்த படகின் உரிமையாளர்தான் பாவம்.....!

* * *

முன்னைய செம்மணி மனிதப் புதை குழி வழக்கும், தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்குகளாக இருந்தாலும், இரண்டு வழக்குகளையும் தொடர்பு படுத்தவேண்டிய தேவை இருப்பதால், நீதிமன்றின் முறையான அனுமதியோடு, பழைய செம்மணி புதைகுழி வழக்கை தற்போதைய செம்மணி மனிதப் புதை குழி வழக்கோடு இணைத்து நீதிமன்றில் அழைப்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இவ்விடயத்தை செம்மணியில் பிரசன் னமாகிக் கையாளும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்திருக் கின்றார்.

செம்மணி பழைய மனித புதைகுழி வழக்கு என்றால் என்ன என்பது பெரும் பாலும் இந்தத் தலைமுறைக்கு விளக் கம் இல்லாத விவகாரமாக இருக்கும்.

அதனால் நேற்று முன்தினம் இவ் விடயத்தை ஒட்டி 'மாலை முரசு' ஆசிரியர் தலையங்கத்தில் வந்த ஒரு பகுதியை கீழே தருகிறேன். அது வருமாறு:-

90 களின் பிற்பகுதியில், இராணுவம் குடாநாட்டை மீண்டும் கைப்பற்றிய பின்னர் கிருஷாந்தி குமாரசுவாமி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் அவரும் அவரது குடும்பத்தவர்களும் படுகொலையுண்ட விடயத்தில் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்பட்டு, ஏனைய நான்கு இராணுவத்தினருடன் சேர்ந்து மரண தண்டனை விதிக்கப்பட்டு, இப் போது வரை அந்தத் தண்டனையை எதிர்பார்த்து சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ என்ற முன்னாள் இராணுவச் சிப்பாய் செம்மணியில் அடையாளம் காட்டிய இடத்தில் பதி னைந்துக்கும் மேற்பட்ட மனித எலும் புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த விவகாரம் தொடர்பிலும் ஆரம்பத்தில் மும்முரமாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் காட்டப்பட்டது. 20 இராணுவத்தினர் வரை கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். 2000 ஆம் ஆண்டில் அவர்களில் சில ருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன் றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டனர். அவர்களின் கடவுச்சீட்டுகளும் முடக்கப்பட்டன. வெளிநாட்டுப் பயணங் களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

ஆயினும், அந்த ஆண்டு நடுப் பகுதி யிலேயே அவர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பித்து பிணை பெற்றனர். அவர்களின் கடவுச் சீட்டுகள் திருப்பி வழங்கப்பட்டன. வெளிநாட்டுப் பயணத் தடைகள் நீக்கப்பட்டன. பல இராணுவத்தினர் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டு இப்போது ஓய்வூதியமும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கு வருடத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவை பெயருக்கு அழைக்கப் பட்டு ஒத்திவைக்கப்படும் சட்ட நாடகம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மீட்கப் பட்ட எலும்புக்கூடுகளும் பிற ஆவணங் களும் எங்கிருக்கின்றன என்பது உறு தியாகத் தெரியவில்லை. ஆயினும் அந்த வழக்கு இனியும் தொடர்ந்து நடந்து, நீதி கிடைக்கும் என்று நம்புவ தற்கு கிஞ்சித்தும் இடமில்லை.

இதே கதி இப்போது செம்மணியில் இடம்பெறும் மற்றைய புதிய புதை குழிக்கும் நேரக்கூடாது என்பதுதான் எல்லோருடைய பிரார்த்தனையும்.

- இப்படி நேற்று முன்தினம் 'மாலை முரசு' தன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருந்தது.

முன்னைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு யாழ்ப்பாணம் நீதி வான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள் ளப்படுவது அந்த வழக்கில் குற்றச்சாட் டப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு பாதுகாப்பற்றது என்ற காரணத்தினால் (90 களின் இறுதியில் அப்படித்தான் நிலைமை இருந்தது) இந்த வழக்கு முதலில் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்துக்கும், பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கும் மாற்றப்பட்டது. இப்போது கொழும்பு நீதிவான் நீதி மன்றில் வருடத்திற்கு ஓரிருமுறை பெயருக்கு அழைக்கப்படும் இந்த வழக்கு, இப்போதைய செம்மணி மனி தப் புதைக்குழி வழக்கோடு தொடர்பு படுத்தப்பட்டு, இரண்டும் ஒன்றாக மீண்டும் யாழ்ப்பாண நீதிவான் நீதி மன்றத்தில் அழைக்கப்படுமானால், பழைய செம்மணிப் புதைகுழி விடயத் திற்கும் நீதி கிடைப்பதற்கான ஒளிக் கீற்று சற்றுத் தென்படுவதாக நம்ப முடியும்.















## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் ஆறாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, 'யுனிசெவ்' சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பாடசாலைப் புத்தகப் பையோடு அடையாளம் காணப்பட்ட சிறிய பிள்ளையினுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மனித என்புத் தொகுதி முழுவதுமாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அந்த என்புத் தொகுதிக்குக் கீழே குழந்தைகளின் சிறிய விளையாட்டுப் பொம்மை ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட காலணி நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காலணி 'பாட்டா' நிறுவனத்தின் பெயர் பொறித்த காலணியாகும். பெண்களின் காலணியை ஒத்தாக அது காணப்படுகின்றமை குறிப்பிடதக்கது.

நேற்று மேலும் சில மனித என்புத் தொகுதி எச்சங்களும் அடையாளம் காணப்படுள்ளன. இவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த நிலையில் காணப்படுவதால் எண்ணிக்கையைக் கணிப்பிடுவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. அவற்றை முழுமையாக அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்:

# இரண்டு வழக்குகளையும் ஒன்றாக இணைப்பது பற்றி கலந்துரையாடல்

## சட்டத்தரணி ரனித்தா தகவல்



(பிரபாகரன் டிலக்சன்)

முன்னைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கும் தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்குகளாக இருந்தாலும் இரண்டு வழக்குகளையும் தொடர்பு படுத்த வேண்டிய தேவை இருப்பதால் நீதிமன்றத்தின் முறையான அனுமதியோடு பழைய செம்மணிப் புதைகுழி வழக்கைத் தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கோடு இணைத்து அழைப்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது, 1999களில் முன்னைய செம்மணி மனிதப் புதைகுழி நடவடிக்கைகளின் போது பணியாற்றிய முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி கிளிபெட் பெரேரா அகழ்வு நடைபெறும் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்தார்.

தற்போது அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் அவருடைய குழுவினரோடு கலந்துரையாடி முன்னைய அகழ்வுப் பணிகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறியிருந்தார்.

மேலும் முன்னைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கும் தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்குகளாக இருந்தாலும் இரண்டு வழக்குகளையும் தொடர்பு படுத்த வேண்டிய தேவை இருப்பதால் நீதிமன்றத்தின் முறையான அனுமதியோடு பழைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கை தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்கோடு இணைத்து அழைப்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.” – என்றார்.





# கொக்குவிலில் வீதி மின்விளக்குப் பழுது பார்த்த பணியாளர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானார்

யாழ்ப்பாணத்தில் வீதி மின்விளக்குப் பழுது பார்த்துக்கொண்டிருந்த நல்லூர் பிரதேச சபையின் ஊழியர் ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கொக்குவில் சந்தையை அண்மித்த பகுதியில் நேற்றைய தினம் நல்லூர் பிரதேச சபையின் ஊழியர் ஒருவர் வீதி மின்விளக்குகளை பழுது பார்த்துக் கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சார தாக்குதலுக்கு உள்ளான ஊழியரை சக ஊழியர்கள் மீட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த நபருக்கு முழங்கை மற்றும் தொடைப்பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் அவர் வைக்கப் பட்டுள்ளார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் பகுதிகளிலும் எதிர்வரும் நாள்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் விதமாக துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப் படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து.

அந்தப் பகுதிகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடும் துப்பரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் அந்தப் பகுதிகளிலும் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அம்பை நொந்து யாது பயன்?

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு விமான நிலையத்தில் விசா வழங்குவது தொடர்பான சர்ச்சைக்குரிய நடவடிக்கை முறைமை சம்பந்தமாக தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகளை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய உயர் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

அதன்படி, நீதியரசர்கள் யஸந்த கோத்தாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு, குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பொருத்தமான தண்டனையை பரிசீலிக்க ஜூலை 24 ஆம் திகதி வழக்கை நிர்ணயித்துள்ளது.

விசா வழங்கல் தொடர்பாக முன்னைய அரசு கொண்டுவந்த நடைமுறையை இடைநிறுத்தி, பழைய முறைமையை உடனடியாக மீளக் கைக்கொள்ளும்படி உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை, உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரத் தவறியமைக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு எதிராக இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த ஆண்டில், முன்னைய அரசு விசா வழங்கல் தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றை திடீரெனக் கொண்டு வந்தது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விசா வழங்கல் பணி ஒப்படைக்கப்பட்டது. அதன்படி மேலதிகமாக 27 டொலரை ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணியும் இதற்காக செலவிட வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டது.

இதனை அடுத்து இந்த விவகாரத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் புதிய விசா வழங்கல் நடைமுறையை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்ததுடன், பழைய முறைமையை உடனடியாக மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும்படி பணித்தது.

ஆயினும் பல வாரங்கள் கடந்தும் பழைய முறைமை கொண்டுவரப்படவில்லை. இதனால் நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டு இருப்பதாக தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பட்டாலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். பழைய முறைமையை நடைமுறைக்குக் கொண்டுவர இன்னும் காலம் தேவை என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையில் மூன்று சாட்சிகளை சட்டத்தரணிசுமந்திரன்நெறிப்படுத்தியமையை அடுத்து, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தைக் கைது செய்து வழக்கு முடியும் வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் கடந்த பத்து மாதங்களாக விளக்கு மறியலில் இருந்து வருகிறார்.

அவர் கைதாகி அடுத்த நாளே பழைய விசா நடைமுறையை உடனடியாக அதிகாரிகள் செயற்பாட்டுக்குக் கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது விளக்கமறியலில் இருக்கும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையை எதிர் கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறார்.

உண்மையில் இந்த புதிய விசா வழங்கல் நடைமுறையில் பெருந்தொகை ஊழல் பணம் கைமாறி இருப்பதான குற்றச்சாட்டுக்கள், பின்புலங்கள் பற்றிய பேச்சுக்கள் வெளியாகி இருந்தன.

இப்போது இந்த விடயத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தண்டனையை ஏற்றுக் கொள்வாராயின் உண்மையில், 'எய்தவர் இருக்க அம்பை மட்டும் நோகும்' விடயமாக இது முடிந்து விடும்.

இவ்விவகாரத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தை இந்த திசைக்கு வழிப்படுத்திய முன்னைய அரசின் ஊழல் தலைவர்கள் தப்பி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை உறுதிப்படுத்த நீதித்துறை என்ன செய்யப் போகின்றது?



# ராமேஸ்வர மீனவர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து படகு ஒன்றில் மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 07 ராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உத்தரவிட்டார்.

ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற ஏழு மீனவர்கள் நேற்று முன்தினம் திங்கள் இரவு எல்லை தாண்டி மீன்பிடித்த நிலையில் இலங்கைக் கடல் பகுதியில் வைத்து கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் அந்த மீனவர்களை நேற்று மதியம் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் அந்த ஏழு மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.











# தாய்லாந்தில் சர்வதேச கரத்தே போட்டியில் சாதித்த வடக்கின் 3 வீரர்களுக்கும் வரவேற்பு

தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் சாதித்துத் தடம் பதித்த வடக்கின் சாதனையாளர்களுக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

குறித்த வரவேற்பளிப்பு இன்று பிற்பகல் யாழ் ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

முன்பதாக தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் வடக்கு மாகாணத்தின் இளைஞர் அணியினரது அதீத ஆற்றலால் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

சர்வதேச கராத்தே சம்மேளத்தினால் கடந்த மாதம் 26 திகதிமுதல் 29 திகதிவரை தாய்லாந்தில் இந்தொ போட்டித்தொடர் நடத்தப்பட்டது.

தகுதிகாண் அடிப்படையில் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தகுதியான உலகின் 14 நாடுகள் பங்கெடுப்புடன் நடைபெற்ற போட்டியிலேயே இலங்கையின் அணிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத் திருந்தது. இந்த அணியில் யாழ்ப்பா ணம் சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரியின் ஒரு மாணவனுமாக வடக்கிலிருந்து மூவர் பங்குபற்றியிருந்தமை குதிப்பிடத்தக்கது.








# தேசியவாதங்களினால் பிளவுபட்டிருக்கும் உலகை சூழற் தேசியத்தாலேயே ஒருங்கிணைக்க இயலும்

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

பாரம்பரிய வாழ்விடத்தையும் தனித்துவமான, மொழியையும் பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் கூட்டத்தைத் தேசிய இனங்கள் என்று அரசியல் அறிஞர்கள் வரையறை செய்துள்ளார்கள். இதில் உயர்வென்றும் தாழ்வென்றும் எதுவுமில்லை. ஆனால், எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தேசிய இனங்கள் தங்களை உயர்வாகக் கருதிச் சிறுபான்மைத் தேசிய இனங்களை அடக்கியொடுக்கி வருகின்றன. இவ்வொடுக்குமுறைக்கு எதிராகச் சிறுபான்மைத் தேசிய இனங்கள் கிளர்ந்தெழுகின்றன. இன, மத, மொழித் தேசியவாதங்களால் பிளவுபட்டுக்கொண்டிருக்கும் உலகை சூழற்தேசியத்தாலேயே ஒருங்கிணைக்க இயலும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை நடைபெற்ற பசுமை அமைதி விருதுகள் விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

காலத்துக்குக் காலம் மானுடத்தை வழிநடத்துவதற்கென்று சிந்தனையாளர்களால் கோட்பாடுகள் முன்மொழியப்பட்டு வந்துள்ளன. சோசலிசக் கோட்பாடு பல தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளில் இனங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக உருவானது. ஆனால், சோசலிச நாடுகள் பிற்காலத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் அடிபணிந்தபோது அங்கு இனங்களுக்கிடையில் மோதல்கள் தலை தூக்கின. சோவியத் யூனியன் சிதறுண்டதும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்த உக்ரைன் மீது சோவியத் ரஷ்யா இப்போது படையெடுப்பதும் சோசலிசச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தியதில் இருந்த குறைபாடுகளால் ஏற்பட்ட விளைவுகள்தான்.

போர்களில் ஏற்படும் உயிரிழப்புகளைவிட சுற்றுச்சூழல் சீர்குலைவினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகமாகும் காலம் வெகு தொலைவில் இல்லை. வளங்களின் அளவுக்கு மிஞ்சிய நுகர்வால் வளப்பற்றாக்குறைவு ஏற்பட்டு, எஞ்சியுள்ள வளங்களைப் பங்கிடுவதில் முரண்பாடுகளும் மோதல்களும் வெடித்துள்ளன. பூமியின் வெப்ப உயர்வு காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து தீவு நாடுகளில் கரையோரப்பகுதிகளை மெல்ல மெல்லக் காவுகொண்டு வருகிறது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளாகக் காலந்தப்பிய அடைமழை, கடும் வரட்சி, காட்டுத் தீ, உயிரினங்களின் அழிவு, இதுவரை காணாத புதுப்புது நோய்கள் என்று பல்வேறு சூழற் பிரச்சினைகள் தினந்தினம் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

தற்போதுள்ள அரசியற் கொள்கைகள், கோட்பாடுகளினால் சூழற் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க இயலாததாலேயே சூழலியம் என்ற புதிய கோட்பாடு முகிழ்த்து வருகிறது. ஒவ்வொரு தேசிய இனமும் தன்னை முதன்மைப்படுத்தும் மனித மையச் சிந்தனையைத் தவிர்த்து சூழல்நேயச் சிந்தனைக்கு முதலிடம் கொடுத்தால் மட்டுமே அது வாழுகின்ற சூழலைப் பாதுகாக்க முடியும். இதன் மூலமே ஒட்டுமொத்தப் பூமியும் பாதுகாக்கப்படும். ஆபத்தின் விளிம்பில் நிற்கும் உலகைக் காப்பாற்றுவதற்குச் சூழலியற்தேசியம் என்ற கோட்பாட்டை உலகை வழிநடத்துகின்ற கோட்பாடாக நாம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே எம்மையும் ஏனைய உயிரினங்களையும் பேரழிவுகளிலிருந்து காப்பாற்ற இயலும். - என்றார்.

# மது போதையில் படுத்திருந்தவர் கிணற்றில் விழுந்து உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

கசிப்பு அருந்தி விட்டு அதிக மது போதையில் படுத்திருந்தவர் அருகில் இருந்த கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணேசராசா சுவாகரன் (வயது 42) என்பவராவார்.

கடந்த 29 ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றிக்கு சென்று சகிப்பு அருந்தி விட்டு சென்றுள்ளார்.

மீண்டும் நள்ளிரவு 11.00 மணிக்கு அங்கு சென்றபோது வீடு பூட்டி இருந்தால் காரணமாக அவர் அவ்விடத்திலேயே படுத்திருந்துள்ளார்.

போதையில் உருண்டு சென்ற அவர் அருகில் இருந்த கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.



கடந்த, திங்கள் கிழமை இரவு சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.





# மன்னார் மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாது!

## தமிழரசு மாவட்டக் கிளைப் பொருளாளர் பதவி விலகல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் பொருளாளர் தி.பரஞ்சோதி கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து விலகுகின்றார் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர், முன்னாள் மாவட்டத் தலைவர், நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் என்ற வகையில் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் பொருளாளர் பதவியிலிருந்து நான் ராஜினாமாச் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைமை கடந்த தேர்தலில் தன்னிச்சையாகச் செயற் பட்டமையுடன், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அலட்சியமாகச் செயற்பட்டமை, கட்சிக்கும் மன்னார் மாவட்டத்திற்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தற்போதைய மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் பல்வேறு வகையான விமர்சனங்கள் மற்றும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால், தோல்வி மற்றும் பின்னடைவுக்கு தார்மீக பொறுப்பேற்று, பொருளாளர் பதவியில் இருந்து விலகுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். - எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதி இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளை தலைவர், செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக செயல்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கட்சிளின் தலைமை பதவியில் இருந்து விலகுகின்றார் எனப் பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இவ்விடயம் குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனை தொடர்புகொண்டு வினவிய போது தான் மாவட்டக் கிளைத் தலைமைப் பதவியில் இருந்து ராஜினாமா செய்ய உத்தேசித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.





# வல்வை சிதம்பரா கணிதப் போட்டி



வல்வை சிதம்பரா கணிதப் போட்டி 2025 இல் தோற்றி சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களில் முதன்மை மாணவர் தெரிவிற்கான இரண்டாவது பரீட்சை கடந்த சனிக்கிழமை காலை 09.30 மணி முதல் 12.30 மணி வரை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.





# பருத்தித்துறை சிவன் கோவிலில் நேற்று சிறப்பான தேர் திருவிழா

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன் கோவில்) தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், 15 ஆம் நாளான நேற்று செவ்வாய் கிழமை காலை 08.30 மணியளவில் பசுபதீஸ்வரப் பெருமான் பர்வதவர்த்தனி சமேதராக தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.











# உயர் குருதி அமுக்கம் வழிகாட்டி நூல் வெளியீடு

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லதுரை பிரசாத் எழுதிய உயர் குருதி அமுக்கம் என்னும் பொது மக்களுக்கான ஓர் வழிகாட்டி நூல் வெளியீட்டு வைக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.

பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை பொது வைத்திய நிபுணர் க. சத்தியமூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நூலாசிரியர் தனது தந்தையாரின் பிறந்த தினத்தன்று இந்த நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் வைத்தியர் கீர்த்தனன், சென்சோற் செல்வர் ஆறுதிருமுருகன், மருத்துவ பீட உயிர் இரசாயனவியல் துறை தலைவர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், இலங்கை உயர் குருதி அமுக்க சங்கத் தலைவர் பேராசிரியர் தி. குமணன், யாழ். பல்கலைக்கழக தமிழ் துறை விரிவுரையாளர் ஆ. அஜந்தகுமார், முன்னாள் பேராசிரியர் நடராஜ சுந்தரம், யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வைத்தியர்கள், தாதியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.









# சாவகச்சேரி பிரதேச சபை கடமைகளை பெறுப்பேற்றார் தவிசாளர் குகதாசன்

சாவகச்சேரி பிரதேச சபை கடமைகளை சம்பிரதாயபூர்வமாக பெறுப்பேற்றார் சபைத் தவிசாளர் பொன்னையா குகதாசன்.

சம்பிரதாயபூர்வமாக கடமைகளை பெறுப்பேற்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச சபை லைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

தவிசாளருக்கு மலர் மாலைகள் அணிவித்து தவிசாளரின் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சர்வ மதப் பிராத்தனைகள் இடம்பெற்று ஆசி வழங்கப்பட்டது.

தொடர்ந்து தவிசாளர் தனது கடமைகளை சம்பிரதாயபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்த போதும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மாத்திரம் கலந்துகொண்டிருந்தனர். தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்திக்கது.



# யாழில் இருந்து வந்து வவுனியாவில் இளைஞனை கடத்தித் தாக்கிக் கொள்ளையிட்ட மூவர் கைது!

(கி.வசந்தன்)

யாழில் இருந்து வருகை தந்து வவுனியா இளைஞன் ஒருவரை தாக்கி அவரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் பறித்து சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மூவர் கார் ஒன்றில் கடந்த வெள்ளிக் கிழமை வவுனியாவிற்கு வருகை தந்து வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக நின்ற வவுனியா 18 வயது இளைஞர் ஒருவரைக் காரில் கடத்திச் சென்று குடியிருப்புக் குளக்கட்டு பகுதியில் வைத்து அந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தி விட்டு அவரது வங்கி அட்டையை பறித்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் பெற்று விட்டு தாக்குதலுக்குள்ளான இளஞனை புதிய பஸ நிலையம் முன்பாக இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழி நடத்தலில் வவுனியா குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த டீ சில்வா தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திஸநாயக்க (37358), ஜெயதுங்க (20211), திலீப் (61461), பொலிஸ் கன்ஸ்டபிள்களான உபாலி (60945), ரணில் (81010), தயாளன் (91792) ஆகிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ் விசாரணைகளையடுத்து யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 19, 21 மற்றும் 19 வயது இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவர்களை முற்படுத்தவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# காணி உரித்துத் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்போம் என்கிறார் காணிப் பிரதி அமைச்சர்!

(கி.வசந்தன்)

சுமந்திரனின் வழக்கால் காணி உரித்து தொடர்பான வர்த்தமானி நிறுத் தப்பட்டாலும், அரச உத்தியோகத்தர்கள் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொது மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வருவோம் என விவசாய காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுனில் ரணசிங்கே தெரிவித்தார்.

வவுனியாவில் விவசாய அமைப்புக்க ளின் பிரதிநிதிகளை சந்தித்ததன் பின் னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்கில் காணி பிரச்சினை கள் நிறையவே இருக்கின்றன. ஒரு புறத்தில் மக்களுடைய காணிக்கான உரித்து இழக்கப்பட்டிருக்கிறது. மறு புறம் காணிகளை பயன்படுத்த முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இராணுவத் தினராலும், பாதுகாப்பு தரப்பபலும், வனவளத் திணைக்களத்தாலும் கையகப் படுத்தப்பட்ட காணிகளும் காணப்படுகின் றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி அந்த காணிகளை மக்களுக்கு மீள வழங்குவ தற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு உள்ளோம்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினால் கைய கப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி விவசாய காணிகளில் பெரும் பகுதியானவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம். ஏற்கனவே அவை வனவளத் திணைக்களத்திற் குரியனவாக அடையாளப்படுத்தப்பட்டி ருந்தாலும் விவசாயிகளுக்காக அவற்றை மீள வழங்குவதற்கு வனவள திணைக் களம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கர் காணிகள் மீள பொது மக்களுக்கு வழங்குவதற்கான நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் எம்மிடம் விவசாயம், கால்நடை, காணி விடயங்களை உள் ளடக்கி ஒன்றிணைந்த வேலைத்திட்டம் இருக்கவில்லை. தற்போது அது உருவாக் கப்பட்டிருக்கிறது. ஆகவே இனி வரும் காலங்களில் ஒன்றிணைந்த வேலைத் திட்டமாக இதனை கொண்டு செல்வதற் கான வாய்ப்பு காணப்படுகிறது.

வவுனியாவில் 40வீதமானவர்கள்வறு மைக்குட்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுடைய பொருளாதாரத்தை மேம் படுத்த வேண்டுமாக இருந்தால் உற்பத்தி பொருளாதாரம் மேம்பட வேண்டும். நாங் கள் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது வறுமையை இல்லாது ஒழிப்பதற்காகவே. வவுனியா மாவட்டத் திற்காக முன்னெடுக்கப்படும் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம்தான் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

வட மாகாணத்தில் உள்ள காணி உரித்து தொடர்பாக நாங்கள் ஒரு விசேட வர்த்தமானி ஒன்றினை வெளியிட்டு இருந்தோம். ஆனால் தமிழ் தேசிய கூட் டமைப்பின் சுமந்திரனால் வழக்கு தாக் கல் செய்யப்பட்டு அந்த வர்த்தமானி தற் போது கைவிடப்பட்டிருக்கிறது.

எனினும் நாங்கள் அரச உத்தியோ கத்தர்கள் ஊடாக வவுனியா மாவட் டத்தில் பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சினை களை முடிவுக்கு கொண்டு வருவதற் கான வேலைத்திட்டங்களை முன்னெடுப் போம். – எனத் தெரிவித்தார்.





# லிட்ரோ எரிவாயு விலையில் எந்த திருத்தமும் இல்லை

2025 ஜூலை மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என லிட்ரோ எரிவாயு தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை லாஃப்ஸ் எரிவாயு விலையிலும் எந்த மாற்றமும் மேற்கொள்ளவில்லை என அந்த நிறுவனத் தின் பணிப்பாளர் நிரோஷன் ஜே.பீரிஸ் தெரிவித்துள் ளார்.





# நாட்டில் காற்றின் வேகம் அதிகரிக்கும் சாத்தியம்

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும், நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கட்சி மாறுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது




உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் அமைக்கப்படும்போது, கட்சி மாறுபவர்கள் அல்லது கட்சி ஒழுக்கத்தை மீறுபவர்கள் தொடர்பில் தேர்தல் ஆணையத்தினால் நடவடிக்கை எடுக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் சட்டத்தில் அதற்கான இடமில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் குறித்த பொது ஆலோசனை நிகழ்வின்போது அவர் இதனை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல இடங்களிலும் கட்சி மாறும் மற்றும் கட்சியின் ஒழுக்கத்தை மீறும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கே, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இந்த பதிலை வழங்கியுள்ளார்.



# பஸ் கட்டணம் குறைக்கப்படும்

எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பஸ் பயணக் கட்டணத்தில், திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, பஸ் பயணக் கட்டணம் 0.55 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், புதிய பஸ் கட்டண திருத்தத்துக்கு அமைய, ஆரம்ப பஸ் பயணக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கட்டணத் திருத்தத்துக்கு அமைய, 2.5 சதவீதத்தால் பஸ் பயணக் கட்டணம் திருத்தப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 274 ரூபாவிலிருந்து 289 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமையினால், 0.55 சதவீதத்தால் மாத்திரம் பஸ் பயணக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஆரம்ப பஸ் பயணக் கட்டணமாக 27 ரூபா அறவிடப்படவுள்ளது.

DMT

මෝටර් රථ ප්‍රවාහන දෙපාර්තමේන්තුව

Department of Motor Traffic

# நிஷாந்த வீரசிங்க உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளருடன் அந்த திணைக்களத்தின் ஓய்வுபெற்ற தகவல் தொழில்நுட்ப உதவி பணிப்பாளர் பிரியந்த பண்டார எரியகம மற்றும் தம்மிக்க நிரோஷன் ஆகியோர் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

முறையான சுங்க அனுமதி இல்லாமல் ஜீப் ரக வாகனமொன்றை பதிவு செய்வதற்கு அனுமதி அளித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கைதான மூவரும் நேற்றைய தினம் கொழும்பு பிரதம நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்ட போது, இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், விசாரணைகளில், 177 வாகனங்கள் நாட்டிற்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு சுங்கச் சான்றிதழ் இன்றி பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கரவெட்டி ஞானசாரியர் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர்கள் விழா

## கோலாகல கோடை ஒன்றுகூடல் ஜுலை 13 இல்

ஐக்கிய இராச்சியத்தில் வாழும் ஞானசாரியர் கல்லூரி, கரவெட்டியின் பழைய மாணவர்களால் ஒருங்கிணைக்கப்படும் "2025 கோலாகல கோடைவிழா" எதிர்வரும் ஜுலை 13ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரை கிழக்கு லண்டனில் உள்ள Valentines Park பகுதியில் மிகுந்த உற்சாகத்துடன், குடும்பமுழுவதும் மகிழ்வுடன் கழிக்கத்தக்க ஒரு நாள் நிகழ்வாக நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வு, காலத்தால் மாறாத நினைவுகளை மீட்டெடுக்கவும், கல்வியளித்த தாய்க் கல்வியினை கௌரவிக்கவும், பழைய மாணவர்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தவும், சமூக உறவுகளை புதுப்பிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வை சிறப்பிக்க, பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் என பலரும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுளனர்.

மேலும், இந்நிகழ்வை சிறப்பிக்க Redbridge கவுன்சிலராகவும், முன்னாள் மேயராகவும் பணியாற்றிய தவதுரை ஜெயரஞ்சனும், Redbridge பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களது பங்களிப்பும் உரையாடல்களும், சமூக ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஞானசாரியர் கல்லூரி, கரவெட்டி – பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் 2025/2026 நிர்வாகக் குழு நிகழ்வை ஒருங்கிணைக்கின்றது.






# தெலுங்கானா இரசாயன ஆலை வெடிவிபத்து; உயிரிழப்பு எண்ணிக்கை 44 ஆக அதிகரிப்பு

தெலுங்கானா மாநிலம் பஷமைலாரம் பகுதியில் உள்ள சிகாச்சி இரசாயன ஆலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கர வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 1 கோடி இந்திய ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா மாநிலம், சங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள பஷமைலாரம் பகுதியில் சிகாச்சி இரசாயன தொழிற்சாலை கடந்த 40 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு மைக்ரோ கிறிஸ்டலைஸ் செல்லுலாஸ் எனும் இரசாயன பவுடர் தயாரிக்கப்பட்டு வருகிறது. 400 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் காலை 143 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது, ஆலையில் இருந்த ரியாக்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இந்த விபத்தில் தொழிலாளர்கள் சுமார் 100 மீற்றர் தொலைவுக்கு தூக்கி எறியப்பட்டனர். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 39 பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற முதல்வர் ரேவந்த் ரெட்டி, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடனடி நிவாரணமாக, இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா 1 லட்சம் இந்திய ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 இந்திய ரூபா வழங்க அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டார். இது உடனடி நிவாரணம் மட்டுமே என்றும் இழப்பீடு அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இதனைத் தொடர்ந்து, வெடிவிபத்தில் இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 1 கோடி இந்திய ரூபா இழப்பீடு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி, காயமடைந்தவர்களுக்கு 10 லட்சம் இந்திய ரூபா வழங்கவும் உத்தரவிட்டார். மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்த தொழிலாளர்களை சந்தித்த முதல்வர், அவர்களின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

# ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பின்னர் 52 செயற்கைக்கோள்களை ஏவும் பணி தீவிரம்

பாகிஸ்தானுக்கு எதிராக ஒபரே ஷன் சிந்தூர் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, இந்திய எல்லைகளை கண்காணிக்க 52 செயற்கைக் கோள்களை ஏவும் பணியைதீவிரப்படுத்த இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

காஷ்மீரில் உள்ள பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க பாகிஸ்தானுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலை மத்திய அரசு நடத்தியது. இந்நிலையில், இந்திய எல்லைகள் மற்றும் எதிரி நாடுகளின் நிலப்பரப்புகளை தொடர்ந்து கண்காணிக்க 52 கண்காணிப்பு செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவும் பணியை மத்திய அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த திட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டே முடிவு செய்தது. மேலும், இராணுவத்துக்காக மட்டும் பிரத்யேகமாக விண்வெளி கொள்கையை கொண்டு வரவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி விண்ணில் இருந்து கண்காணிக்கும். 3 ஆம் கட்ட திட்டத்துக்கு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டம் 26,968 கோடி இந்திய ரூபா செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் 21 செயற்கைக் கோள்கள் தயாரிப்பு மற்றும் விண்ணில் ஏவும் பணியை இஸ்ரோவும், 31 செயற்கைக் கோள்கள் மற்றும் விண்ணில் ஏவும் பணியை தனியார் நிறுவனங்களும் மேற்கொள்ளும்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் முதல் கட்டமாக சில கண்காணிப்பு செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்படும். எதிர்வரும் 2029 ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 52 செயற்கைக் கோள்களும் விண்ணில் ஏவப்பட்டு விடும். இதற்கான பணிகளை மத்திய அரசு தீவிரப்படுத்தி உள்ளது. மேலும், செயற்கைக் கோள் ஏவும் ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள 3 தனியார் நிறுவனங்கள், தங்கள் பணிகளை விரைவுப்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.



இந்திய கண்காணிப்பு செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்ட பிறகு, சீனா, பாகிஸ்தானின் நிலப்பரப்பு மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளை தொடர்ந்து 24 மணி நேரமும் துல்லியமாக கண்காணிக்க முடியும். பாகிஸ்தானுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலின் போது, இந்தியாவின் கார்டோசேட் செயற்கைக் கோள் மிக முக்கிய பங்கு வகித்தது. பாகிஸ்தானில் இராணுவத்தின் நடமாட்டங்களை இந்த செயற்கைக்கோள் கண்டறிந்து இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு தகவல் வழங்கியது குறிப்பிடத்தக்கது.






# தொலைபேசி உரையாடல் கசிவு; தாய்லாந்து பிரதமர் இடைநீக்கம்

கம்போடிய செனட் தலைவர் ஹன் சென் உடனான தொலைபேசி உரையாடல் கசிந்த விவகாரம் தொடர்பாக தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு நீதிமன்றம் பதவி இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

அண்டை நாடான கம்போடியா எல்லையில் நிலவும் பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில், அந்நாட்டின் முன்னாள் பிரதமரும் கம்போடிய செனட் தலைவருமான ஹன் சென் உடன், தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தொலைபேசியில் உரையாடினார். அப்போது, ஹன் சென்னை சமாதானப்படுத்தும் நோக்கில், தங்கள் நாட்டு இராணுவத் தளபதி குறித்து விமர்சித்துப் பேசியுள்ளார். இந்த உரையாடல் அடங்கிய குரல் பதிவு கசிந்ததை அடுத்து, தாய்லாந்து பிரதமருக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரித்த தாய்லாந்தின் அரசமைப்பு நீதிமன்றம், பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா நெறிமுறைகளை மீறியுள்ளார் என குற்றம் சாட்டியது. இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட இருப்பதால், பிரதமரை பதவியில் இருந்து இடைநீக்கம் செய்தும் அரசமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்துப் பேசிய பேடோங்டார்ன் ஷினவத்ரா, "எனது பணி தடைபடுவதை நான் விரும்பவில்லை. இருந்தாலும், நீதிமன்ற உத்தரவை ஏற்றுக்கொள்கிறேன். இந்த உத்தரவால் நான் கவலைப்படுகிறேனா என்று நீங்கள் என்னிடம் கேட்டால், ஆம் நான் கவலைப்படுகிறேன்," என்று தெரிவித்தார்.

குரல் பதிவு கசிவை அடுத்து, தாய்லாந்தின் கூட்டணி அரசாங்கத்தில் இருந்து ஒரு பெரிய கட்சியான பூம்ஜைதாய் கட்சி வெளியேறியது. இதையடுத்து, தாய்லாந்து மன்னர் மகா வஜிரலோங்கோர்ன், புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

# இந்தியா – அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளார் என்றும் இந்தியா – அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகை பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட், நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அமெரிக்கா எவ்வாறு கருதுகிறது என்ற கேள்விக்கு பதிலளித்த கரோலின் லீவிட்,

"ஆசிய பசிபிக் பகுதியில் இந்தியா மிகவும் முக்கியமான நட்பு நாடாக உள்ளது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் மிகச் சிறந்த உறவைக் கொண்டுள்ளார். அதை அவர் தொடர்ந்து வைத்திருப்பார்." என்று தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்த மற்றொரு கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர்,

"அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கு மிக நெருக்கமாக உள்ளன என்று ஜனாதிபதி கடந்த வாரம் கூறினார். அது உண்மைதான். நான் எங்கள் வர்த்தக செயலாளரிடம் இது குறித்து இப்போதுதான் பேசினேன். அவர் ஜனாதிபதியுடன் ஓவல் அலுவலகத்தில் இருந்தார். அவர்கள் இந்த ஒப்பந்தங்களை இறுதி செய்யும் பணியில் இருக்கிறார்கள். இது தொடர்பான அறிவிப்பை ஜனாதிபதியிடம் இருந்தும், அவரது வர்த்தகக் குழுவிடமிருந்தும் மிக விரைவில் நீங்கள் கேட்பீர்கள்." என்று தெரிவித்தார்.

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப்,




"இந்தியாவில்நாங்கள்வர்த்தகம்செய்வதற்கானஉரிமையை அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை எட்டப் போகிறோம் என்று நினைக்கிறேன். தற்போது, அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் அங்கு செல்ல முடியாது, அதைப் பற்றி யோசிக்கக் கூட முடியாது.

நாங்கள் ஒரு முழுமையான வர்த்தக தடை நீக்கத்தை எதிர்பார்க்கிறோம், இது நினைத்துப் பார்க்க முடியாதது, அது நடக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த நேரத்தில், இந்தியாவுக்குச் சென்று வர்த்தகம் செய்வதை நாங்கள் விரும்புகிறோம்." என்று தெரிவித்திருந்தார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான காலக்கெடு ஜூலை 9 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் 7 நாள்கள் மட்டுமே மீதமுள்ள நிலையில், இரு தரப்பினரும் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய வேலை செய்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.07.2025




இன்று வளர்ச்சிக்கு உகந்த நாள். உங்கள் திறமைகளை எளிதாக வெளிப படுத்துவீர்கள். இன்றைய தினத்தில் முக்கியமான முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியாக செய்வீர்கள். உங்கள் சக பணியாளர்களிடம் நல்ல விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். நல்லிணக்கம் காணப்படும்.

நிதிவளர்ச்சி நன்றாக உள்ளது. இன்று போதுமான செழிப்பு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் தைரிய உணர்வு உங்களுடைய நல்ல ஆரோக்கியத்துக்கு வழிகாட்டும்.




உங்கள் பேச்சின் மூலம் சாதனை படைப்பீர்கள். அதே சமயத்தில் விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வேலை கிடைப்பதற்கான சாதகமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் துணையைக் கவரும் வகையில் உங்கள் அன்பைப் பேசி வெளிப்படுத்துவீர்கள்.

நிதிவளர்ச்சி நன்றாக உள்ளது. உங்கள் சேமிப்பும் அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சற்று முடக்கமாக காணப்படும். உங்கள் செயல்களை புத்திசாலித்தனத்துடன் செய்ய வேண்டும். இன்று நீங்கள் தவறு செய்ய வாய்ப்பு உள்ளது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்படலாம். பணியில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் காதலை நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க உதவும்.

பூர்வீகச்சொத்துக்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இன்று உங்களுடைய ஆரோக்கியத்தை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். ஆனால் உங்கள் தாயாரின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள்.




இன்று வளர்ச்சி காண்பதில் சற்று சிரமம் காணப்படும். ஆழ்ந்த தூக்கத்துக்கு வாய்ப்பில்லை. குழம்பிய மனம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள். தியானம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேர்ந்து அதனால் உயர் அதிகாரிகளிடம் கெட்ட பெயர் ஏற்படலாம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் காதல் விவகாரங்களை வேறு ஒரு நாளுக்கு தள்ளிப் போடுவது நல்லது.அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். பணத்தை புத்திசாலித்தனமாக செலவு செய்ய நீங்கள் திட்டமிடவேண்டும்.மனஅழுத்தத்தின் காரணமாக உங்களுக்கு தொடைவலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வது உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். அதன் காரணமாக பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்று நீங்கள் உறுதியையும் வலிமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்கள் பணிகளை நிறைவேற்றுவதற்கு சில தாமதங்கள் அல்லது தடைகள் ஏற்படலாம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிர்ஷ்டம் குறைந்து காணப்படுவதால் கடின உழைப்பின் மூலம் மட்டுமே பணம் சம்பாதிக்க முடியும்.




கடுமையான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தனித்தன்மையை வெளிக் கொணர்வீர்கள்.

நீங்கள் அர்ப்பணிப்புடனும் முழு முயற்சியுடனும் பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

இன்றைய நாளில் திருப்திகரமாக உணர்வீர்கள். மகிழ்ச்சியான தருணங்களை உங்கள் துணையுடன் இன்று பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் இனிமையாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதிநிலை இன்று சீராக இருக்கும். உங்கள் குடும்பத்திற்காக பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




சில தடங்கல்களை சந்தித்த பின் இன்றைய தினத்தை நீங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். இன்றைய தினத்தை சரியான முறையில் பயன்படுத்த வழிகளும் உபாயங்களும் உங்களிடம் இருக்கும்.

குறித்த நேரத்தில் பணிகளை செயல்படுத்த மிகவும் கடினமாக இருக்கும். உங்கள் பணிகளை முடிக்க மிகுந்த தாமதமாகும். இன்று உங்கள் துணையுடன் சூடான சர்ச்சைகள் ஏற்படலாம் இது உங்கள் துணையுடனான புரிந்துணர்வில் ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக இருக்கலாம்.தேவையற்ற செலவுகளுக்காக பணத்தை செலவு செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்களிடம் தொடர் முயற்சிகள் காணப்படும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களுக்கு இட்ட பணிகளை எளிதாக முடிப்பீர்கள். ஆசைகள் கூட எளிதில் நிறைவேறும்.

இன்று காதல் கனியும் நாள். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

இன்று நாள் முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். முழுதிடத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.07.2025




உங்கள் பணிகளை விரைந்து செய்ய இயலாது. உங்கள் செயல்களில் சிறிது மந்த நிலை காணப்படும். இது உஙகளுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று எதிர்மறைவிளைவுகளை சந்திக்க நேரலாம் மற்றும் உங்கள் எதிர்மறை எண்ணங்கள் பிரச்சினையை வெற்றி கொள்ள உதவும் உங்கள் ஆற்றலை மேலும் குறைக்கும். உங்கள் தைரியக்குறைவு காரணமாக உங்கள் வளர்ச்சியில் மந்தத்தன்மை காணப்படும்.

காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை தேவை.

இன்று பணம் குறைந்து காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதில் தடைகள் காணப்படும். இன்று பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள். பிரார்த்தனை மூலம் உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய தினம் உயிர்ப்பற்ற நாளாக இருக்கும் முக்கியமான முடிவுகளை வேறொரு நாளுக்கு தள்ளிப் போடுங்கள். இன்று மனஉறுதி இழந்து காணப்படுவீர்கள். உங்களின் சுயவளர்ச்சிக்கு நீங்கள் உறுதியுடன் போராட வேண்டும்.

ஒரே ஒரு முயற்சியில் உங்கள் பணியில் வெற்றி காண முடியாது. உங்கள் பணி தாமதமாகும்.

உங்கள் துணையுடனான முக்கியமான சந்திப்பை தவிர்த்துவிடு:ங்கள் அல்லது ஒத்திப் போடுங்கள். இன்று அதற்கு உகந்த நாள் அல்ல.

நீங்கள் எதிர்பார்த்த் அளவிற்கு நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைகள் காணப்படும். கவனமாக இருப்பது நல்லது.விஷயங்களை இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். அதன் காரணமாக மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடனான தொடர்பாடலில் சில சிக்கல்கள் காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரலாம். வறுத்த மற்றும் காரமான உணவுகள் உட்கொள்வதை தவிர்த்தல் நல்லது.




இன்றைய நாள் செழிப்பான பலன்கள் கிடைப்பதற்கு சாதகமான நாள் அல்ல. தடைகள் நிறைந்து காணப்படும். குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். இது மிகுந்த வருத்தத்தை உண்டாக்கும்.

பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. அதனால் உங்கள் சௌகரியங்களை இழக்க நேரும். நேர்மறை எண்ணத்துடன் கவனமாக பணிகளைக் கையாளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது.இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பிற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும்.

# ஓமந்தையில் பொலிஸாரால் அபகரிக்கப்படுகின்ற காணி!

## விகாரை அமைக்க முயற்சி எனக் குற்றச்சாட்டு





**(வவுனியா நிருபர்)**

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியைப் பொலிஸார் அபகரித்து விகாரை அமைப்பதற்கு முயற்சிக்கின்றனர் எனப் பொது மக்களால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஏ9 வீதியில் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை நேற்று முன்தினம் துப்புரவு செய்த ஓமந்தை பொலிஸார் அந்த இடத்தில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணி நீண்ட காலமாக ஒருவரின் பராமரிப்பில் இருந்த போதிலும் அவருக்கான காணி ஆவணங்கள் இல்லாத நிலையில் தற்போதும் அது அரச காணியாக காணப்பட்டு வருகின்றது. எனினும் அந்தக் காணிக்கு சொந்தம் கோரும் நபர் இக்காணி தனக்குரியதானது என பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்த நிலையில் – இதுவரை அவருக்குக் காணிக்கான ஆவணங்கள் கொடுக்கப்படாத பின்னணியிலேயே – பொலிஸார் காணியை துப்பரவு செய்துள்ளனர்.

காணி உரிமையாளரை அச்சுறுத்தி துப்புரவு செய்தனர் எனத் தெரிய வருவதோடு, குறித்த காணியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து குறித்த காணியை உரிய நபருக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.